(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 55 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, திசெம்பர் 03, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0053/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கம் (PSMPA) என்பது 1891 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க PSMPA கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நூற்றாண்டு பழமைவாய்ந்த நியதிச்சட்ட நிதி நிறுவனமாகும் என்பதையும்,

(ii) அது, குழுவின் தலைவர், திறைசேரிச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் மற்றும் வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என்பதையும்,

(iii) அதன் அலுவலகத்துக்கான ஒரு கட்டிடம் 48 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொள்வனவாளருக்கும் (PSMPA) விற்பனையாளருக்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கை இல. 2921 இன் பிரகாரம் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்து ஒரு மாதத்தினுள் PSMPA இற்கான "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" பெறப்படும் வரை ரூபா 7 மில்லியன் தடுத்து வைத்தல் பணமாக வைக்கப்பட்டதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) 2006 ஆம் ஆண்டுக்கான PSMPA கணக்குகள் பற்றிய தனது அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்டவாறு, மூன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இற்றைவரை "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" கிடைக்கப்பெறவில்லை என்பதையும்,

(ii) அறியப்படாத ஏதோ காரணங்களுக்காக தடுத்து வைத்தல் பணத்தில் ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இவ்விடயம் தொடர்பாக பகிரங்க விசாரணை ஒன்றை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0122/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் பதவிக்காலத்தில் மத்திய வங்கியினால் புதிதாக அச்சிட்டு விநியோகிக்கப் பட்ட நாணயத் தாள்களின் மொத்த பெறுமதியையும்,

(ii) அவ்விநியோகத்தில் மத்திய வங்கியினால் ஈட்டப்பட்ட முடியுரிமை வரியுடன் அவற்றுக்கான மொத்த அச்சிடுகைக் கூலியையும்,

(iii) அதே காலத்தில் மத்திய வங்கியால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முடியுரிமை வரியையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பணத்தை அச்சிட அல்லது நாணயங்களை அடிக்கப் பயன்படுத்திய கம்பனிகளின் பெயர்களையும்,

(ii) கேள்வி மனுக்கோரல் நடைமுறையொன்றினூடாக அது வழங்கப்பட்டதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், கேள்வி மனுக்கள் சமர்ப்பித்த கம்பனிகளின் பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0123/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பில் "தயட்டகிருல" கண்காட்சி நடந்த திகதியையும், அது நடத்தப்பட்ட இடத்தையும் நடந்த காலப்பகுதியையும்,

(ii) அரசாங்கத்தினாலும் அரசாங்க நிறுவனங்களினாலும் பொறுப்பேற்கப்பட்ட மொத்தச் செலவினங்களையும்,

(iii) அவ்வாறான தமாசாக்களின் குறிக்கோளினையும்,

(iv) அப்பணியில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கையினையும்,

(v) வேறு ஆக்கபூர்வ வழிகளில் பயன்படுத்தி இருக்கக்கூடியதும் இதில் வீணாகச் செலவளிக்கப்பட்டதுமான "மனித மணித்தியாலங்களை"யும்,

(vi) கண்காட்சிக்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0247 / '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதிப்பயணிகள் போக்குவரத்து (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0273 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0274 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள் பிரதி அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0412 / '08

7.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அண்மையில் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் இலங்கை வங்கியில் எப்பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு நடைபெற்றது,

(ii) மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் யாவை,

(iv) மேற்படி ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மாவட்ட அடிப்படையில் பெற்றுள்ள புள்ளி மற்றும் இடம் யாது,

(v) மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுடைய விபரங்கள் யாவை,

(vi) தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்காணல் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுள்ள புள்ளிகள் உள்ளடங்கிய ஒரு அறிக்கையை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0536 / '08

8.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடுவெல பிரதேச செயலகப் பிரதேசத்தில் அம்பலன்வத்த எனும் மல்பெரி தோட்டத்தில் அரசாங்கத்துக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு,

(ii) இக்காணிகளை ஏதேனும் தேவைக்காக வேறு தரப்பினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், காணிகளின் அளவு வீதம் என்ன,

(iv) அது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது,

(v) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒரு பகுதியை விற்கத் தீர்மானித் திருந்தால் சம்பந்தப்பட்ட காணியின் அளவும் விற்பதற்கான காரணமும் யாது,

(vi) விற்பனை செய்யாமல் வேறேதேனும் அடிப்படையின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடுவெல பிரதேசத்தில் விளையாட்டு மைதானமொன்று தேவையாக இருக்கின்றதென்பதையும் அதற்குப் பயன்படுத்த வேறு அரச காணிகள் இல்லையென்பதையும்,

(ii) அதற்காக இக்காணியைப் பெற்றுத்தரும்படி பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அதன் பொருட்டு காணி வழங்க முடியாவிட்டால் அதன் காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0652/ '08

9.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் மடஹபொல, மெதகந்த மற்றும் பரகஹஎல மலைகளை அண்மித்துள்ள பிரதேசத்திலுள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றையும், மடஹபொல மெதகந்த மற்றும் பரகஹஎல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியும் விவசாயிகளது காணிகளின் உரிமை சம்பந்தமான சட்ட ரீதியான தன்மை யாது எனும் விபரத்தையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மடஹபொல மற்றும் மெதகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 50 ஏக்கர் காணிக்கு உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் நபரொருவர் மேற்படி காணிகளில் வசிப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றா ரென்பதை அவர் அறிவாரா ?

(இ) (i) அத்தகைய தனியார் காணியொன்று மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக்காணியின் அளவும், தன்மையும் யாதென்பதையும்,

(iii) மேற்படி காணியின் முதலாவது உரிமையாளர் தொடக்கம் இன்றைய உரிமையாளர் வரையிலான உரித்தறிக்கை என்னவென்பதையும்,

(iv) எவரேனும் தனியார் காணி உரிமையாளர் மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியோரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பின் அவர்களுக்கு மாற்றுக்காணிகள் பெற்றுத்தரப்படுமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0741 / ' 08

10.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) கா/உடுகம மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கு சுகாதார அமைச்சு அங்கீகரித்துள்ளது என்பதையும்,

(ii) தற்பொழுது மாகாண சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் ஆதார வைத்தியசாலைக்கான பிரதான திட்டம் தயாரிக்கப்படுகிறது என்பதையும்

அவர் அறிவாரா,

(ஆ) (i) தற்பொழுது வைத்தியசாலையில் உள்ள புதிய கட்டிடங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் கட்டிடங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடங்கள் என்பதையும்,

(ii) ஆதார வைத்தியசாலைக்குரிய புதிய கட்டிடம் அமைக்கப்படும் வரை பழைய கட்டிடங்களைப் பயன்படுத்துவதாக இருப்பினும், புதிய நிர்மாணங்களின் போது பழைய கட்டிடங்களைப் படிப்படியாக அகற்ற வேண்டும் என்பதையும்,

(iii) கராப்பிட்டிய வைத்தியசாலையில் நிலவும் அதிக நெரிசலைக் குறைப்பதற்கும் உடுகம வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள நோயாளிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இவ்வைத்தியசாலை துரிதமாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதையும்,

(iv) சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற அவசர நிலைமைகளின் போதுகூட எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாத, பிரதேசத்தில் உள்ள ஒரே வைத்திய சாலை இது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆதார வைத்தியசாலையின் நிருமாணப் பணிகளை, மாகாண சுகாதார அமைச்சுக்கு தனியாக மேற்கொள்ள முடியாது என்பதால்,அவர்களுடன் கலந்துரையாடி தேவையான நிதி ஏற்பாடுகளை படிப்படியாக வழங்குவதை எவ்வளவு காலத்திற்குள் செய்வார் என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0742 / '08

11.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) உடுகம டிப்போவுக்குச் சொந்தமான பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பேருந்து வண்டிகளில் சேவையிலீடுபடுத்தக் கூடியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) சிறு திருத்தங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) சேவையில் ஈடுபடுத்த முடியாத பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி டிப்போவில் டிப்போ அத்தியட்சகரில் இருந்து சாதாரண ஊழியர் வரை எவ்வளவு பணியாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் இரவு நேர சேவையில் ஈடுபடுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் மிகவும் திருப்தியற்ற நிலையில் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான சுத்தமான குடிநீர் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இவர்களுக்குத் தேவையான உணவக வசதிகள் ஒழுங்காக இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) மிக நீண்ட காலமாக மிகக் குறைந்த வசதிகளுடன் மிகவும் உயர்வானதொரு சேவையை வழங்குகின்ற மேற்படி டிப்போவின் ஊழியர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள குறைந்த வசதிகளை நிறைவு செய்தல் எவ்வளவு காலத்தினுள் நடைபெறும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0743 / '08

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) என்னால் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழுவுக்கான 2647 ஆம் இலக்கமுடைய பிரேரணைக்கான விடையாக கா/நாகொட றோயல் தேசிய பாடசாலையின் அத்தியாவசியமான ஆசிரியர் வெற்றிடங்களை சீக்கிரமாக பூர்த்திசெய்வதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கூறினார்களென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆசிரியர் பதவி வெற்றிடங்களில் சித்திரம், 6-11 ஆண்டுக்கான விஞ்ஞானம்,உயர்தர இணைந்த கணிதம், தர்க்கவியல், விளையாட்டு மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக சம்பந்தப்பட்ட பாடசாலையதிபரால் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டின் கல்வியியல்பீட டிப்ளோமாதாரிகளைக் கொண்டு மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதாக கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் இடமாற்றம்,) திரு. ஜே. எச். எம். டபிள்யூ. ரஞ்சித் ED / 01 / 27 / 01 / 09 / 2008-G இலக்கமும் 2008.02.25 ஆம் தேதியும் கொண்ட கடிதத்தின் மூலமாக எனக்கு அறிவித்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) 2008 யூலை மாதமாகும் வேளையில் வாக்குறுதியளித்த எண்ணிக்கையில் எத்தனை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளார்க ளென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இப்பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் ஆலோசனைக் குழுவில் இணங்கியவாறு மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்ய அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0748 / '08

13.

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கொடஉட கிராம உத்தியோகத்தர், 2008.06.29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கோட்டேகொட தபால் அலுவலக வளவுக்குள் முறையற்ற விதத்தில் பிரவேசித்து அங்கு அமைக்கப்பட்டிருந்த மதிலைத் தகர்த்து மேற்படி காணியின் ஒருபகுதியை சட்டவிரோதமாகக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) கிராம உத்தியோகத்தர் ஒருவர் அரச சொத்தொன்றுக்குச் சேதமேற்படுத்தி அங்கிருந்த காணியைக் கைப்பற்றிக் கொள்வது பாரதூரமான குற்றமாகும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) இந்தச் சட்டவிரோத செயல் தொடர்பாக பொதுநிருவாக அமைச்சின் செயலாளருக்கும் மாத்தறை மாவட்டசெயலாளருக்கும் முறைப்பாடு கிடைத்துள்ளதா,

(ii) அது தொடர்பாகத் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) அரச சொத்தொன்றுக்கு விளைவித்துள்ள சேதமானது வேலை இடை நிறுத்தத்துக் குள்ளாக்குமளவுக்கான ஒரு குற்றம் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) (i) ஆமெனில், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காததன் காரணம் யாது,

(ii) இது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0749 / '08

14.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கோட்டேகொட தாபால் அலுவலகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதிலைத் தகர்த்து அந்தக் காணியை, கொடஉட கிராம உத்தியோகத்தர் 2008.06.29 ஆம் திகதி கைப்பற்றிக் கொண்டது தொடர்பாக திக்வெல்ல பொலிசுக்கு எழுத்துமூல முறைப்பாடு கிடைத்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடு தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளதா,

(ii) ஆமெனில், என்ன நடவடிக்கை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) அரச சொத்துக்களைச் சேதப்படுத்தி பலவந்தமாக ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது ஆளொருவரைக் கைது செய்யுமளவுக்குக் கடுமையான குற்ற மாகும் என்பதையும்,

(ii) நீதிமன்றத் தீர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் அரச சொத்துக்களைப் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும்,

(iii) சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமானால் அது யாது,

(ii) அது எக்காலப்பகுதியில் எடுக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0778 / ' 08

15.

கௌரவ பேமசிறி மானகே,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திக்வெல்ல பிரதான தபாற் காரியாலயம் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதும் மேற்படி தபாற் காரியாலயம் பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும்?

(ii) மார/விஜித தேசிய பாடசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடம், தபாற் காரியாலயம் ஒன்றின் தேவைக்காக அமைக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அதன் நிருமாணப் பணிகள் எப்போது பூர்த்தியாகியதென்பதையும்,

(iv) மேற்படி கட்டிடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் எவ்வள வென்பதையும்,

(v) அதற்கான நிதி யாரால் வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) திக்வெல்ல, பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து புதிதாக அமைக்கப் பட்ட மேற்படி கட்டிடத்திற்கு உள்ள தூரம் எவ்வளவு என்பதையும்,

(ii) சுனாமியினால் பாதிக்கப்பட்ட தபாற் காலயாலயத்திலிருந்து மேற்படி பஸ் நிலையத்திற்கு உள்ள தூரம் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 11 மற்றும் 13 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட இருபதாம் நாள்) - குழு ஆய்நிலையில் (பரிசீலனை திசெம்பர் 02 ஆம் திகதி).

*2.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 06 ஆம் திகதிய 1552/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 103, நிகழ்ச்சித்திட்டம் 1,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இருபத்தி எட்டாயிரத்து அறுபத்தேழு மில்லியன் முன்னூற்றி முப்பத்தி எட்டு ஆயிரம் (28,067,338,000ரூபா) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 103 | — | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 1 | — | இயங்கு நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 2 | — | அமைச்சு நிர்வாகமும் ஸ்தாபன சேவைகளும் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 24,060,779,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | 4,006,559,000 |
| | | மொத்தம் | 28,067,338,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, திசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 9 வரையுள்ள மதிப்பீடு களின் மொத்தம் 28,089,980,332 ரூபா.

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான *தீர்மானம்* (இல 1),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் *தீர்மானிக்கின்றது.*

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல 03 இல் குறித்துறைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வெண்டுமெனப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்

### 8 ஆம் பிரிவின் கீழான 03 ஆம் இலக்கக் கட்டளை

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "சிறைச்சாலைகளின் கைத்தொழில், கமத்தொழில் பொறுப்பேற்புகள் முற்பணக்' கணக்கு "– சிறைச்சாலைகள் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துறைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துறைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை ரூ. 67,000,000 இலிருந்து ரூ. 79,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் III இல் குறித்துறைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை ரூ. 68,000,000 இலிருந்து ரூ. 80,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துறைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை மிளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துறைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை மிளாய்வு செய்யப்படவில்லை.

(இக் கட்டளை 2008.12.31 ஆம் திகதிவரை செல்லுபடியானதாகும்)

ஒப்பம் மஹிந்த ராஜபக்ஷ,
நிதி திட்டமிடல் அமைச்சர்,

2008.11.04
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*16.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ''(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*17.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*18.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*23.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*26.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*28.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*29.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*30.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*31.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*32.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

எக்சத் ஜன இசுறு பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

வண. மூனமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

40.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்கள்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) எனும் சட்டமூலத்திற்கு குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிகளுக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.